**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எத்தனை கேள்வி கொடுக்கப் பட்டிருக்கிறது என்று பார்த்தால் தெரியும். ஒரு கேள்விக்கு மட்டும் 20 துணைக்கேள்விகள் கொடுத்திருக்கிறோம். எல்லோரும் கேட்பது என்றால் முடியாது. அடுத்து, கேள்வி எண் 315.

* 315 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the District Collectors have been empowered to conduct raids with a view to unearth illegally hoarded stocks of yarn?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இதுவரையில் எந்தெந்த மாவட்டங்களில் 'ரெய்ட்' செய்து நூல் கைப்பற்றப்பட்டிருக்கிறது? சென்ற ஆண்டு நடந்த போராட்டத்தின் காரணமாக அரசு தலையிட்டு இவ்வளவு நாள் கழித்தும் கார்டுதான் கொடுத்திருக்கிறதே தவிர, நூல் கொடுக்கவில்லை. ஆனால் தனிப்பட்ட வியாபாரிகளிடம் ஏராளமான நூல் தேங்கி இருக்கிறது. ஆகவே, 'எசன்சியல் கமாடிட்டீஸ்' ஆக்ட், செக்ஷன் 16, 18 மூலம் கலெக்டர் மூலமாக 'ப்ரோக்யூர்' செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 'எசன்ஷியல் கமாடிட்டீஸ்' என்று உத்தரவு போட மத்திய அரசின் அனுமதி வேண்டும். மற்ற பிரச்னைகளைப்பற்றி விளக்கம் சொல்லியிருக்கிறேன். நாமே சில நடவடிக்கைகளை எடுத்தோம். அதற்கும் சுப்ரீம் கோர்ட்டு ஸ்டே கொடுத்திருக்கிறது.

## விசைத்தறிகள்

* 316 வினா—திரு. கி. செயராமன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசினரால் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட விசைத்தறிகள் அனைத்திற்கும் அனுமதிகள் வழங்கப்பட்டு விட்டனவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.